பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை: கார்த்திகை 29 (15—12—67) வெள்ளி

வெளியூர்: மார்கழி 1 (16—12—67) சனி [இதழ்: 153

இந்தியின் இலட்சணம்!

"மத்திய அரசின் 20,000 நிர்வாக அலுவலகங்களில் 1,300 இடங்களில் மட்டுமே இந்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது—என இந்தி மொழிக் கமிஷனரின் அறிக்கையே கூறுகிறது; இந்த நிலையில் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு என்ன செய்யப்போகிறீர்கள் ?"

என சுதந்தரா கட்சி உறுப்பினர் லோபோ பிரபு மக்களவையில் கேட்டபோது, இந்தி உறுப்பினர்கள் செய்வதறியாது விழித்தனர்!

'இந்தியை எதிர்த்து இறுதி வரையில் போராடுவோம்'

—இரா. செழியன்

'உள்நாட்டுப் போர் என்றால் அதற்கும் தயார்!'

—சிகண்டன் நாயர்

'விரும்பவில்லையானால் விடை பெற்றுக்கொள்ளுகிறோம்'

—அனந்தன் நம்பியார்

கரைபுரண்ட வெள்ளமென இந்தி மொழி ஆதிக்க எதிர்ப்பு உணர்ச்சி -- கட்சி வரம்பு கடந்த மொத்த உருவமாகத் தென்னக உறுப்பினர்கள்!

'பெரும்பான்மை'யினர் வாதம் தவிடுபொடி -- இந்தி வெறியர்களின் தார்மீகத் தோல்வி!

"ஆங்கிலத்தை அப்புறப்படுத்தி, அந்த வெறுமையில் இந்தியைத் திணிக்கப் பார்க்கிறீர்கள் ; நாங்கள் ஆதரவு தருவதாகச் சொல்லியது துல்லியமான ஆட்சிமொழித் திருத்த மசோதாவுக்குத்தான் ; இந்திக்காரர்களின் போக்குக்குப் பணிந்து கலப்படம் செய்யப்பட்ட மசோதாவுக்கு அல்ல ; எனவே, இந்தி பேசாதவர்கள், இதனை எதிர்ப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை !

"இந்தி ஆதிக்கம் எந்த உருவில் வந்தாலும் அதனை இறுதிவரையில் எதிர்த்துப் போராடுவது தான் கழகத்தின் வேலை !"

என்று கழக உறுப்பினர் இரா. செழியன், நேற்று மக்களவையில், ஆரவாரத்துக்கிடையே தெரிவித்திருக்கும் கருத்துக்களுடன், ஆட்சிமொழித் திருத்த மசோதாவின் இரண்டாம் கட்ட விவாதம் துவங்கியிருக்கிறது.

மக்களவை நேற்றும் தொடர்ந்து உணர்ச்சிப் பிழம்பாகக் காணப்பட்டது. ஆளுங் கட்சிக்கும்—எதிர்க் கட்சிகளுக்கும் இடையே நடந்த ஒரு விவாதமாக அது தோன்றவில்லை ; இந்தி வெறியர்களுக்கும்—அதைத் தடுத்து நிறுத்திப் பாதுகாப்புத் தேடிக்கொள்வோருக்குமிடையே நடந்த ஓர் உரிமைப் போராகத்தான் விவாதம் காட்சியளித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்தியாளர்கள் வர்ணித்திருக்கின்றனர்.

"தங்களுக்கென ஓர் உயர்ந்த மொழி இல்லாததனாலேயே, இந்தி மொழி பேசாதோர், ஆங்கிலத்தைப் பக்கபலமாகப் பெற விரும்புகிறார்கள்" என்ற இந்தி வெறியர்களின் கண்மூடித்தனமான போக்கும், அவர்களது உரைகளில் தென்பட்டது ! 'பெரும்பான்மை இருக்கிறது' என்ற ஒரே காரணத்தினால், அடிக்கடி குறுக்கிடு செய்வதில் அவர்கள் வெற்றி பெற்றார்களே தவிர, வாதப்பிரதிவாதங்களில் தவிடுபொடியாக்கப்பட்டிருக்கின்றனர் !

இந்தித் திணிப்புக்கு எதிராக எல்லைக் காவலர்களாக நின்று பணிபுரியும் கழக உறுப்பினர்களுடன், தமிழகத்து உறுப்பினர் அனந்த நம்பியார், கேரளத்து ஸ்ரீகண்டன் நாயர் ஆகிய இருவரும் நேற்று செலுத்திய பங்கு, 'தென்னகம் இந்தி மொழி பற்றிக் கட்சி வரம்பு கடந்து ஒன்றுபட்டிருக்கிறது' என்பதனை எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதலாகவே, தனிப்பட்ட வகையில் பம்பரமெனச் சுழன்று, இந்தி பேசாதோரின் கவனத்தையும், அவ்வப்போது பாராட்டினையும் பெறும் கேரளத்து பு. சோ. கட்சி உறுப்பினர் ஸ்ரீகண்டன் நாயர்,

"இந்திக்காரர்கள், பெருந்தன்மைப் போக்கிலிருந்து நீண்டதூரம் ஒதுங்குகிறார்கள் ; பார்க்கப்போனால் அவர்கள், ஓர் உள்நாட்டுப் போருக்கே ஆயத்தமாகிறவர்கள்போல் நடந்து கொள்கிறார்கள் ; உள்நாட்டுப் போர்தான் அவர்கள் முடிவு என்றால், இந்தி பேசாத மக்கள் அதற்கும் தயார்தான். தென்னக மக்கள்மீது வன்முறைத் தாக்குதல்கள் நடப்பதை இனியும் அனுமதிக்க முடியாது"

என்று வெண்கலக் குரலில் முழங்கி முடித்தபோது, கழக உறுப்பினர் வரிசை ஒருமுகமாக எழுந்து நின்று, மகிழ்ச்சி தெரிவித்தது !

"இந்திக்காரர்கள் வேண்டுமானால், ஆங்கிலத்தை விட்டுவிடட்டும் ; அதற்காக, இந்தியை எங்கள் மீது திணிக்க வேண்டாம் !

"இந்தியைவிடப் பழமையானது – பெருமையானது எங்கள் மொழி ; கேரளம், இந்தி ஆதிக்கத்தை ஒருபோதும் அனுமதிக்காது"

என ஸ்ரீகண்டன் நாயர், மேலும் பேசுகையில் முழக்கமிட்டிருக்கிறார்.

"தென்னகத்து மக்கள் இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இறுதிவரை போராடுவார்கள். கார்களை எரிப்பதோ, ஆங்காங்கே எங்களில் சிலரைத் தாக்குவதோ எங்களைக் கோழைகளாக்கிவிடாது"

என, மார்க்சிய கம்யூனிஸ்டு உறுப்பினர் அனந்தன் நம்பியார் எச்சரித்துப் பேசியபோதும், கழக உறுப்பினர்கள் கையொலி எழுப்பி வரவேற்றனர் !

அவர் இன்னும் ஒரு படி மேலே போய் இடிமுழக்கமிட்டிருக்கிறார், படியுங்கள் :—

"எங்களை விரும்பவில்லை என்று இந்திக்காரர்கள் கூறுவார்களேயானால், நாங்கள் அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொள்கிறோம் ! அவர்கள், இரயில்களைக் கொளுத்துவார்களேயானால், அந்த இரயில்களை வார்தாவுக்கு அப்பால், வடக்கே திருப்பிவிடத் தென்னகம் தயாராக இருக்கிறது.

"ஆங்கில வெறுப்பைக் கைவிட்டு, காரியத்தில் ஈடுபடுங்கள்."

இந்தி வெறியரைத் திணறடித்தார் இரா. செழியன்

நேற்று கழக உறுப்பினர் இரா. செழியன், தமிழில் பதிவு எண் பொறிக்கப்பட்ட தனது காரில் நாடாளுமன்றக் கட்டிடத்துக்கு வந்தபோது, ஏராளமான பேர் ஆச்சரியத்துடனும், அதிர்ச்சியுடனும் நின்று கவனித்தனர் !

இந்தி பேசாத உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர் !

புதுடில்லியில் சென்ற சில நாட்களாக நடந்துவரும் ஆங்கில எதிர்ப்புப் போராட்டத்தையொட்டி, கார்களில் உள்ள ஆங்கில எழுத்துக்கள் மட்டுமன்றி அராபிய எண்களும் அழித்து நாசம் செய்யப்பட்டன ; ஆபத்துக்குப் பயந்த கார் உரிமையாளர்கள், தாங்களாகவே முழுப் பலகையும் இந்தி மொழியில் எழுதிக்கொண்டனர் !

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

குடிகெடுக்கும் இந்தி வெறி!

உ. பி. மாநிலத்தில் பல மணவிலக்கு வழக்குகள் !

லக்னோ, டிச. 15—

இந்தி மொழி ஆதரவுக் கிளர்ச்சியினால், லக்னோவில் பல மணவிலக்கு வழக்குகள் தோன்றிவிட்டன !

"கடந்த சில நாட்களுக்குள், சுமார் 12 பேர் நீதிமன்றங்களில் மணவிலக்குக் கோரியுள்ளனர்" என்று அரசு வட்டாரம் ஒன்று கூறியது.

கணவன் அல்லது மனைவியின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியினால் உறவு கெட்டு, இவ்வாறு மணவிலக்குக் கோரப்பட்டிருக்கிறது !

ஒரு விண்ணப்பத்தில், கணவன் தன்னை வதை செய்ததாக மனைவி குற்றஞ்சாட்டியிருக்கிறார் ; கணவனின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியைப் பொறுக்க முடியாததால் அவர் மணவிலக்குக் கோருகிறாராம் !

தனது மனைவி இந்திச் சேனைக்கும்—ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சியுடன் தொடர்புடைய பிற அமைப்புக்களுக்கும் பணம் கொடுப்பதால் தனக்கு மணவிலக்கு வேண்டுமென்று ஓர் இளைஞர் கேட்டிருக்கிறார். அவர் இதுகுறித்து மறுப்புத் தெரிவித்தபோது, சொல்லத்தகாததை மனைவி சொல்லிவிட்டாராம்!

இந்திக் கிளர்ச்சிக்காரர்களின் வன்செயலைக் கண்டிக்க ஒரு மனைவி மறுத்ததால், அவருக்கும்—அவரது கணவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது !

சென்னைக்கு நெல்லூர் பச்சரிசி

தருவித்து வழங்கத் தமிழக அரசு முயற்சி

சென்னை, டிச. 13—

சென்னை நகரின் தேவைக்காக ஆந்திரத்திலிருந்து நெல்லூர் பச்சரிசியைத் தருவிப்பதற்கான பண்டமாற்று முறையில் முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

நெல்லூர் அரிசியைப் பயன்படுத்திப் பழகிவிட்ட சென்னைவாசிகளுக்கு அந்த அரிசியைத் தருவித்துக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக, வேறு வகை அரிசியைத் தரத் தயாராக இருப்பதாகவும், கேரளத்துக்கு ஆந்திரத்திலிருந்து மத்திய அரசு ஒதுக்கீட்டின்படி அனுப்பக்கூடிய அரிசியை சென்னைக்கு அனுப்பினால், அதற்குப் பதில் தமிழகத்திலிருந்து கேரளத்துக்கு அரிசி அனுப்புவதாகவும் தமிழக அரசு டெல்லிக்குத் தெரிவித்துள்ளது.

நாளை...நடுப்பகலில் !

ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா—தற்போதுள்ள நிலவரங்களின்படி—நாளை (சனிக்கிழமை) நடுப்பகல் ஒரு மணியளவில் இறுதி வாக்கெடுப்புக்கு வந்து சட்டமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்ற மேலவைக்கு இம்மசோதா அடுத்த கிழமை செல்ல இருக்கிறது.

காமராசர் — நேற்றும் இன்றும்!

'அதுவா--பார்க்கலாம்'

---அப்போது!

'அப்படியா, தெரியாதே'

---இப்போது!

மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக அனைத்திந்தியக் காங்கிரசின் 'சங்லி' மாநாடு தள்ளி வைக்கப்பட்டிருப்பது பற்றிக் காமராசரை—'தலைவர்' என்ற முறையில் கேட்ட ஒரு பத்திரிகைக்கு, அவர், 'அப்படியா?—அது பற்றிய செய்தி எதுவும் தெரியாதே' என்று பதிலளித்திருக்கிறார்!

ஆனால், இதுபற்றி மகாராட்டிர மாநில காங்கிரசுக் கமிட்டித் தலைவர் வசந்தராவ் பாட்டீல், தலைமையமைச்சருடன் விவாதித்திருக்கிறார்!

உடன் தலைமையமைச்சர் இந்திரா, மொரார்ஜி தேசாயுடனும், சவாணுடனும் இதுபற்றிக் கலந்து பேசியிருக்கிறார்!

காமராசர் சென்னையில் இருப்பதால், உடன் அவருடன் தொடர்பு கொள்ளவில்லை எனத் தெரிகிறது; எனினும், புதுடில்லிக்கு அவர் வரும்போது, செய்தியைச் சொல்லிக் கொள்ளலாமென்று இருக்கிறார்களாம்!

காமராசரின் 'தலைமறை'வில் இதுபோன்ற சாதாரண பிரச்சினைகள் மட்டுமல்ல — இதைவிடப் பெரிய விவகாரங்களே முடிவெடுக்கப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கல்கத்தா காங்கிரசைக் குல்சாரிலால் நந்தா கலைத்துவிட்டதை, செய்தித்தாள்களைப் பார்த்துத்தான் காமராசர் தெரிந்துகொண்டார்!

"நிஜலிங்கப்பா, தலைவர் பதவிக்கு முடிவுசெய்யப்பட்டிருக்கிறார்" என்ற முதல் நாள் இரவு செய்யப்பட்ட முடிவையும், பொழுது விடிந்த பின்னர்தான் காமராசர் தெரிந்துகொண்டார்!

ஷேக் அப்துல்லா யார் யாரைச் சந்திக்கலாம்?

புதிய சிக்கல் உருவாகிறது

காஷ்மீர் முன்னாள் தலைமையமைச்சர் ஷேக் அப்துல்லா மீதுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, டில்லி நகர எல்லைக்குள் நடமாட அவருக்கு இப்போது அனுமதி அளிக்கப்பட்டதையொட்டி புதிய சிக்கல் தோன்றி இருக்கிறது.

புதிய உத்தரவின்படி, ஷேக் அப்துல்லா டில்லி நகருக்குள் விருப்பமான இடத்திற்குச் செல்லவும், அரசியல் தலைவர்கள்—தமது பழைய நண்பர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்; ஆனால், அவர் பொதுக்கூட்டங்களில் பேசுவதோ, அயல்நாட்டினரைச் சந்திப்பதோ, பத்திரிகைகளுடன் தொடர்புகொள்வதோ கூடாது என நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், பத்திரிகையாளர்களாக உள்ள அப்துல்லாவின் நண்பர்கள் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை; ஆனால் அந்த நண்பர்களோ, தாங்கள் தனிப்பட்ட முறையில் அப்துல்லாவைப் பார்க்க விரும்புவதாகவும், தாங்கள், 'பத்திரிகை நிருபர்களாக அவரைச் சந்திக்கச் செல்லவில்லை' என்றும் வாதிடுகின்றனர்.

அப்துல்லாவின் தனிப்பட்ட நண்பர்களான பல பத்திரிகையாளர்கள், இப்போது ஸ்ரீநகரிலிருந்து டில்லி வந்துள்ளனர்.

இந்தப் பத்திரிகையாளர் நண்பர்கள் விஷயத்தில் என்ன செய்வது என்பது, அதிகாரிகளுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இதற்கு, இன்னும் சில தினங்களுக்குள், தீர்வு காணப்படும் எனத் தெரிகிறது.

"காஷ்மீர்ப் பிரச்சினைக்கு முடிவு காணப் போதுமான வாக்கெடுப்பு நடத்தவேண்டும்" என்று கோரி இயக்கம் நடத்திவருபவர்களும், அப்துல்லா ஆதரவாளர்களுமான வாக்கெடுப்பு முன்னணியினர் அறுவர், ஸ்ரீநகரிலிருந்து டில்லி வந்து அப்துல்லாவினைச் சந்தித்து, சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர்.

இந்தியாவுக்கு எதிரான—பாகிஸ்தானுக்கு ஆதரவான அரசியல் கட்சிகளின் முக்கிய தலைவர்கள் சிலர், இப்போது ஸ்ரீநகர், ஜம்மு சிறைகளில் இருந்துவருகின்றனர்; அவர்கள் இவ்வாண்டு இறுதியில் விடுதலை செய்யப்படலாம் என அறியப்படுகிறது.

அண்மையில் டில்லி சென்றிருந்த காஷ்மீர் முதலமைச்சர் எம். சாதிக், மாநில அரசின் இந்த எண்ணத்தை மத்திய தலைவர்களிடம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மாற்றுத் தரப்பு தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்கான நல்ல சூழ்நிலையை உருவாக்கவே இந்த முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது.

சாதனைக்கும் தண்டனையா?

மக்கள் தொகைப் பெருக்கத்தைத் திறமையுடன் தடுத்து நிறுத்தியதற்காகத் தமிழகம், இரண்டு நாடாளுமன்ற இடங்களை இழந்திருக்கிறது.

இதற்கு மாறாக, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் திறமையுடன் அமுல் நடத்த முடியாத உத்தரப் பிரதேசம், ஐந்து நாடாளுமன்ற இடங்களை அதிகம் பெற்றிருக்கிறது!

மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற இடங்கள் ஒதுக்கப்படுவதால், குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையில் வெற்றிகரமான சாதனைகளைப் படைத்திருக்கும் தமிழகம், அதற்குத் 'தண்டனை'யாக நாடாளுமன்ற இடங்களை இழக்க நேரிடுவது பற்றித் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், வேலூரில் செய்தியாளர்களிடையே பேசும்போது குறிப்பிட்டுள்ளார்கள்.

"குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முழுமையாக அமுல் நடத்துவதால் மாநிலத்துக்கான நாடாளுமன்ற இடங்கள் பாதிக்கப்படக் கூடாது; இதற்கான உறுதிமொழியை மத்திய அரசு வழங்க வேண்டும்" என அவர் கேட்டுக்கொண்டார்.

டில்லியில் தமிழர்களுக்குச் சோதனை-- சென்னையில் காமராசர்!

எத்தனையோ எதேச்சாதிகார ஏகாதிபத்தியங்களைத் தனக்குள் விழுங்கிப் புகழ்பெற்ற டெல்லி நகரம், 'இன்று மற்றொரு புதுவகையான இந்தி ஏகாதிபத்தியத்தின் கடைசி நேரத்துக் கொழுந்துவிட்டெரியும் ஒளியையும் கண் இமைக்காமல் புன்முறுவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறது!

பீகிங் நகரில், இந்தியர்கள் அவமானப்படுத்தப்பட்டு—அடித்து நொறுக்கப்பட்டதை நாம் அனைவரும் ஒருமுகமாகக் கண்டித்த குரலொலி மங்காத நேரத்திலேயே, 'நமது சொந்தத் தலைநகர்' என்று செம்மாந்து கருதிக்கொண்டிருக்கும் டெல்லியில், தமிழர்கள் அடித்து நொறுக்கப்படுகிறார்கள்!

தமிழனாகப் பிறந்துவிட்டதற்காகவே, அவர்களுடைய எலும்பு அங்கு உடைபடுகிறது!

அவர்களுடைய வாணிபம், 'பேய்த் தன'மாக அழிக்கப்படுகிறது!

அவர்கள் விரும்பிப் படிக்கும் தாய்த் தமிழ் இதழ்கள்—அவர்களுடைய கண்முன்னாலேயே—தீவைத்துக் கொளுத்தப்படுகின்றன!

அவர்கள் கலைபயிலும் பள்ளிகள், தரைமட்டமாக்கப்படுகின்றன!

அவர்களுடைய குலக்கொழுந்துகள்—சின்னஞ்சிறார்கள், பலமாகத் தாக்கப்படுகின்றனர்!

இவைகளைக் கண்டு, அங்கிருக்கும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்ணீர் வடித்துக் கண்டனக் குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள்!

இத்தனையும், 'ஏக இந்திய ஆட்சிமொழி' என்பதன் போர்வையில்--இந்திக்கு விழாவெடுக்கும் வேண்டாத அற்பப் புத்தியால் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன!

நாட்டின் சலுகை பெற்ற முதல்தரக் குடிமகனாக ஆவதற்குத் துடிக்கும் நாலாந்தரப் பாரம்பரியம் படைத்தோருக்கும்—'நாட்டின் புகழ் குவிக்கும் நல்ல பண்பாடுகளைக் கொண்டிருந்தும் நாங்கள் ஏன் இரண்டாந்தரக் குடிமக்கள் ஆக வேண்டும்' என்று எதிர்ப்புக் குரல் கொடுக்கும் தென்னாட்டு மக்களுக்கும், அங்கு கடுமையான பலப் பரீட்சை நடந்துகொண்டிருக்கிறது!

இங்கிலாந்து நாட்டின் சாக்கடை ஓரத்தில் 'கோலி' விளையாடிப் பொழுதைக் கழித்த இராபர்ட் கிளைவ், இந்தியாவின் மூத்தகுடி--முடிசூடா மன்னன் ஆவதற்கு ஆங்கிலேய ஏகாதிபத்தியம் வழிவகுத்ததைப்போல், உத்தரப் பிரதேசத்தின் நாலு கால் பிராணிகள்கூட இனி தென்னாட்டு அரசியல் வாழ்வின் உச்சாணிக் கிளையில் அமர்ந்து கொக்கரித்துக் கொண்டிருப்பதற்கு இந்தி மொழி ஏகாதிபத்தியம், செப்பனிட்டுக் கொண்டிருக்கிறது!

'தனக்குள்ளே பிளவுபட்ட வீடு நிலைக்காது' என்று சொன்ன ஆபிரகாம் லிங்கன் வார்த்தையை அப்படியே நூற்றுக்கு நூறு மெய்ப்பித்துக்காட்டும் வகையில், தனக்குள்ளாகவே பெரும் விரிசல் காணும் பரிதாபத்திற்குத் தற்போதைய கலப்படமிக்க மொழி மசோதாவின் மூலம் இந்தியத் துணைக்கண்டத்தின் 'நூலேணி' அரசியல் வாழ்வு ஆளாகிவிட்டிருக்கிறது!

இந்த நிலையில்—இந்தக் காமராசர், சென்னை திருமலைப் பிள்ளைத் தெரு வீட்டில் தூங்காமல் தூங்கிச் சுகித்துக் காலந்தள்ளிக் கொண்டிருக்கிறார்!

இந்தக் காமராசர் பேரில், எத்தனை 'மவுசு' வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டது?

'புராணங்'களில் வரும், சாம்சன், ஹெர்குலிஸ், பீமன்போல் அவரைக் கற்பனை செய்து, 'அடுத்துவரும் அத்தனைத் துன்பங்களும், அவர் நிழல்பட்ட மாத்திரத்திலேயே நீருகக் காற்றில் கலந்து பறந்தோடிவிடும்' என்றல்லவா 'கூலிக் கும்பல்'கள் கொட்டி முழக்கின?

"தலைவர் காமராசர் காங்கிரசுத் தலைவராக இருக்கும் வரை—அவரை மீறி டெல்லியில்—தமிழ்நாட்டு நலன்களுக்கு எதிராக எதுவும் நடந்துவிட முடியுமா?" என்று கேட்டுக் கொக்கரித்த இழிபிறவிகள் எத்தனை?

'இப்போது அவைகள் எங்கே?' என்று—எந்தத் தமிழ் மகனும் பொருட்படுத்திக் கவனிக்கவில்லை!

ஆனால் இந்தக் காமராசர், இப்போது ஏன் சென்னையில் வந்து முடங்கிவிட்டார்?

ரோம் நகர் தீப்பிடித்து எரிந்துகொண்டிருக்கையில் நீரோ மன்னன், இசைக் கச்சேரி நடத்திக் கொண்டிருந்தான்!

இஸ்ரேலிய விமானங்கள் எகிப்திய விமானப் படையை நிர்மூலமாக்கிக் கொண்டிருந்தபோது எகிப்திய படை அதிகாரிகள், இரவுக் களியாட்ட மண்டபங்களில் சுகித்திருந்தனர்!

1965-ஆம் ஆண்டு தமிழகத்தின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர்—பக்தவத்சலம் அடக்குமுறையால்—ஈ, எறும்புகளைப்போல் கொன்று குவிக்கப்பட்ட நேரத்தில், இதே காமராசர், கேரளத்துச் சுற்றுலா முடிந்து டெல்லி ஜந்தர்மந்தர் தெரு மாளிகையில் 'ஜபதபங்களில்' ஈடுபட்டிருந்தார்!

இப்போது டெல்லியில், தமிழர் அரசியல் வாழ்வு—மொழி மேன்மை—வாணிப வளமை—தன்மதிப்பு அத்தனையும் இந்தி வெறியர்களால் அறைகூவலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், காமராசர், சென்னையில் முடங்கிக் கிடக்கிறார்!

மிக முக்கியமான நேரத்தில், இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல், கோழைத்தனமாக ஓடி ஒளிந்துப் பதுங்கிக்கொண்ட டஜன் கணக்கான 'அதிபர்'களை, இரண்டாம் உலகப் போரின்போது இந்த உலகம் கண்டது!

தமிழர்கள் கூர்ந்து கவனிக்கும் ஒவ்வொரு நேரத்திலும், 'தலைவர்' காமராசர், இருக்க வேண்டிய இடத்தில் இல்லாது ஒளிவதை, இந்தத் தமிழகம் கணக்கெடுத்து வைத்திருக்கிறது!

இந்தப் பெரும் பலசாலி காமராசர்தான், தமிழகத்தில் இனிக் காங்கிரசுக் கட்சியைப் பலப்படுத்தத் தன் முழு நேரத்தையும் செலவழிக்கப் போகிறாராம்!

தமிழர்களே! வேதனை கப்பிக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலும், காமராசர் போன்ற காங்கிரசுக்காரர்களை நினைத்துச் சற்று சிரியுங்கள்—பாவம்!

—தோழன்

உழவுக் கருவிகளைக் குறைந்த விலையில் உருவாக்குக!

தொழிலதிபர்களுக்கு அண்ணா அறிவுறுத்தல்

உள்நாட்டுப் பொருள்களை ஊக்குவிக்க வேண்டுகோள்

சென்னை, டிச. 13—

"ஏழை உழவர்கள்கூட வாங்கக்கூடிய அளவுக்கு வேளாண்மை இயந்திரங்கள் குறைவான விலையில் கிடைக்க வழிசெய்ய வேண்டும்.

"டீசல் எஞ்சின் விலை ஏழைகள் வாங்கக்கூடியதாக இருந்தால்தான், அவற்றை அவர்கள் வாங்கிப் பயன்படுத்திப் பலன்பெற முடியும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், தொழிலதிபர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

எண்ணூரில் உள்ள ஈ.ஐ.டி. பாரி நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட 10,000-வது டீசல் எஞ்சினைத் தமிழக அரசுக்கு அன்பளிப்பாக வழங்கும் விழா, அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கிர்லோஸ்கர் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. கிர்லோஸ்கர், அந்த டீசல் எஞ்சினை, தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்களிடம் வழங்கினார்.

அண்ணா அவர்கள் தம் தலைமை உரையில் மேலும் கூறியதாவது:—

"இந்தியாவில் உள்ள பொது மக்கள், வெளிநாட்டுப் பொருட்களை விரும்புவதுபோல், நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களை விரும்புவதில்லை; இதற்குக் காரணம், 'வெளிநாட்டுப் பொருட்கள்தான் மிகவும் சிறந்தவை' என்ற நம்பிக்கைதான்!

"வெளிநாட்டுப் பொருட்களுக்கு இருக்கும் மதிப்பு நம் நாட்டுப் பொருட்களுக்கும் கிடைக்குமாறு செய்யவேண்டும்; அவ்வாறு செய்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் இங்கே இருக்கின்றன.

"வெளிநாட்டில் இருப்பதைப்போல் நம் நாட்டிலும் தொழில் நுட்ப அறிவு படைத்த பொறியியல் வல்லுநர்கள் இருக்கிறார்கள். உள்நாட்டுப் பொருட்களை ஆதரிப்பதில் அரசும் அக்கறை கொண்டிருக்கிறது.

"சிறு தொழில்களை வளர்ப்பதன் மூலம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்; அதன் மூலம் பொருளாதார முன்னேற்றமும் அடைய முடியும்.

"அரசுக்கு இயந்திரங்களின் தேவை அதிகம் இருக்கிறது.

(3-ம் பக்கம் பார்க்க)

இரண்டு 'இந்தியா'க்களை உருவாக்குகிறார்கள்!

இந்தியாவின் 'பிரஷ்யா'வாக இருக்க இந்தி பேசும் பகுதி விரும்புகிறது!

'உரிமை கோருவோரின் உணர்ச்சியைக் கேலி செய்ய வேண்டாம்' -- மாறன் எச்சரிக்கை

"மிரான்வினர் என்பார் கூறியதுபோல், இந்தி பேசும் பகுதி தன்னை இந்தியாவின் பிரஷ்யாவாக நினைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறது! ஆம்! பிரஷ்யா எப்படி ஜெர்மானிய நாட்டையே அடக்கி ஆண்டதோ அதுபோல், இந்தி பேசும் பகுதி இந்தியாவின் பிரஷ்யாவாக விரும்புகிறது! இந்தியாவின் அதிகார கேந்திரமாக விரும்புகிறது!

"இப்படியொரு பயம் நாட்டில் நிலவுகிறது; அது தவறாகவும் இருக்கலாம்—சரியாகவும் இருக்கலாம்; ஆனால் அத்தகைய பயம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுங்கள். அந்தப் பயத்தைப் போக்க அரசியல் சட்டத்தைத் திருத்தியே ஆகவேண்டும்.

"'உரிமை கேட்பவர்களுக்கு மத்திய அரசில் கோட்டா ஒதுக்குவோம்' என்று கூறுவது, மொழி உணர்ச்சியைக் கேலி செய்வதாகும்!

"இந்த மசோதா மூலம் 'இந்தி மொழி இந்தியா'—'இந்தி மொழி அல்லாத இந்தியா' என்று இரண்டு கோள்களை, தொடர்பில்லாத வகையில் வான வெளிக்கு அனுப்பும் 'மெக்கானிசம்'தான் தென்படுகிறது!'

என்று முரசொலி மாறன் அவர்கள், மக்களவையில் ஆட்சி மொழித் திருத்த மசோதா மீது பேசுகையில் குறிப்பிட்டுத் தம் உரையை முடித்தார்; அவர் ஆற்றிய உரை வருமாறு:—

முரண்பாட்டின் முகாம்!

"என்னுடைய கட்சியும், என்னை இந்த மன்றத்துக்கு அனுப்பிய தமிழ்நாட்டு மக்களும், இதுநாள் வரை வலியுறுத்திவந்தது இந்த சர்வ சாதாரணமான மசோதா அல்ல—அரசியல் சட்டத் திருத்தத்தையே ஆகும்; அதற்கு இந்த அரசு ஒப்பவில்லை!

மிகவும் குறைந்த கோரிக்கையான 'மே' என்ற வார்த்தையை, 'ஷெல்' என்று மாற்றுவது என்பதையாவது செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது; அந்தச் சிறிய சலுகையைக்கூடத் தரமுடியாத இந்த மசோதா, முரண்பாடுகளின் முகாமாக இருக்கிறது!

பல சந்தேகப் பொருள்களைத் தரும் 'மே' என்ற வார்த்தையில் தொடங்கிடும் இந்த மசோதா, 'மே-ஷெல்' என்று சுற்றிச் சுழன்று, மொத்தத்தில் அரசியல் பூசலுக்குரிய சொர்க்கமாக இருக்கிறது!

இங்கு பேசிய உள்துறை அமைச்சர் சவாண் 'இந்தியும்–ஆங்கிலமும் நீடித்த இரு ஆட்சி மொழிகளாக இருக்கும்' என்றார்; ஆனால் இந்த மசோதா என்ன கூறுகிறது?—ஒரு குறிப்பிட்ட பிரிவில், ஒரு மாநிலமும் மத்திய அரசும் விரும்பினால், தங்களுக்குள் இருக்கும் ஆங்கிலத் தொடர்பை அகற்றிவிடலாம்' என்று கூறுகிறது. இதற்குப் பெயர் என்ன?—ஒய். பி. சவானின் மசோதாவிலுள்ள சேத் கோவிந்த தாஸ் பிரிவுதானே!

இலட்சணம் இதுதான்!

இந்த மசோதா, 'இந்தி பேசுவோருக்கும் – இந்தி பேசாதோருக்குமிடையில் புறப்பட்ட சமரசம்' என்று வர்ணித்தார்கள்!

யார் யாருக்கிடையே சமரசம்? உயிர் வாழவேண்டிப் போராடும் மனிதனுக்கும்—புலிக்குமிடையே நடக்கும் சமரசம் போன்றதா?

இந்தியாவின் முதல்தரக் குடிமகனாக உள்ள இந்தி பேசுகிறவன் மகராசனாகவும், இரண்டாந்தரக் குடிமகனாக உள்ள இந்தி பேசாதவன் தரித்திர நாராயணனாகவும் செய்ய வழிவகுப்பதுதான் இந்த மசோதா!

இந்தி பேசாத மக்களின் வாழ்க்கை அடிப்படை உரிமையைப் பறித்திட முயல்வதுதான் இந்த மசோதா!

தலைமையமைச்சர் தந்த உறுதிக்கு மறுப்பு இது!

தமிழகத்திலிருந்து வந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சியுடன் பேசிய மாணவர் குழுவிடம், தலைமையமைச்சர் இந்திரா, 'இந்த மசோதா அரசியல் சட்டத் திருத்தத்திற்குத் சமமானது' என்று கூறியதாகப் படித்தேன்; தலைமையமைச்சரின் அந்தப் பேச்சுக்கு, ஒரு முக்கிய பிரமுகரையே பதில் சொல்ல வைக்கிறேன்:—

"பண்டித நேருவின் வாக்குறுதிக்குச் சட்ட உருவம் தந்து சட்டத் திருத்தம் கொண்டு வந்தால், ஆட்சி மொழி நிலையில் 1965-ம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலையே ஏற்படலாம்; ஆயினும், 'அந்தச் சட்டம் திருத்தப்பட்டுவிடலாம்—நீக்கப்பட்டுவிடலாம்' என்ற பயம் மீண்டும் ஏற்படலாம்; அந்தப் பயம் நீக்கப்பட வேண்டுமானால், அரசியல் சட்டத்தில் அந்த உறுதிமொழிக்கேற்ப மாறுதல் செய்யப்படல் வேண்டும்."

இவ்விதம் கூறிய அந்தப் பிரமுகர் யார்?—இந்தி எதிர்ப்பின் ஈட்டி முனையாக விளங்கும் அறிஞர் அண்ணாவோ, இராஜாஜியோ, காயிதே மில்லத் அவர்களோ, தி. மு. கழகத்தினிடம் வெறி கொண்ட நானோ அல்ல; தைரியமும் துணிவுமிக்க இந்தப் பேச்சைப் பேசியவர், இன்றைய உள்துறைத் துணை அமைச்சராக இருக்கும் கே. எஸ். இராமசாமி அவர்கள்தான்!

இந்தக் கொள்கைப் பண்பு, இந்திரா காந்தி அமைச்சரவையில் அவர் இடம் பெறுவதற்குத் தடைக்கல்லாய் இல்லாமல் இருப்பது கண்டு மிகவும் மகிழ்கிறேன்.

இந்தக் கேள்வி பிறக்காதா?

தலைமையமைச்சர் இந்திரா அவர்கள், 'இந்தியாவை இணைக்கும் மொழியாக இந்தியும், இந்தியாவை உலகுடன் இணைக்கும் மொழியாக ஆங்கிலமும் இருக்கும்' என்று கூறினார்.

"இந்தியாவை உலகின் பிற பகுதிகளுடன் இணைப்பதற்கு ஆங்கிலம் தேவை என்றால், இந்தியாவுக்குள் பல பகுதிகளை இணைக்கும் மொழியாக அது ஏன் இருக்கக்கூடாது?" என்ற கேள்வியும் பிறக்கிறது!

எங்கள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், தமது அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையில் ஓர் உவமைமூலம் இந்தக் கருத்தை வலியுறுத்தினார்:-

"இரண்டு இணைப்பு மொழி தேவை என்று கூறுவது பெரிய பூனை செல்வதற்குப் பெரிய வழி இருக்கும்போது — சிறிய பூனை செல்வதற்குச் சிறிய வழி ஒன்றை ஏற்படுத்துவதற்குச் சமமாகும்!"

தெரியாததைவிடத் தெரிந்தது மேலல்லவா?

ஆங்கிலம்–இந்தி ஆகிய இரண்டு மொழிகளுக்குமிடையே நாங்கள் எதைத் தேர்ந்தெடுக்க முடியும்?

பைசாசத்திற்கும் பெருங் கடலுக்குமிடையே—ஆங்கிலத்திற்கும்—இந்திக்குமிடையே ஆங்கிலம் எனும் பைசாசத்தையே தேர்ந்தெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்; ஏனெனில், ஓர் ஆங்கிலப் பழமொழி உண்டு; 'தெரியாத தேவதையைவிடத் தெரிந்த பைசாசமே மேல்' என்று; அதுபோல், தெரியாத இந்தியைவிடத் தெரிந்த ஆங்கிலமே மேல்!

ஆங்கிலத்தை நாங்கள் தேர்ந்தெடுப்பது, அதன் பயன் கருதி -- அது தரும் அகில உலகத் தொடர்பு கருதி! அது தரும் நலனை -- கருத்துக்களைக் கருதி!

கட்டுக்கதை அம்பலம்-- கோரிக்கை எழுகிறது!

"இந்தியா முழுவதிலும் அதிக மொழி பேசுவோர் இந்தி பேசுவோராக இருந்தனர்" என்ற கட்டுக்கதை, அண்மையில் பகிரங்கமாக்கப்பட்டுவிட்டது.

முன்பு இந்தி பேசுவோர் 34 சதவிகிதமாக இருந்தனர்; அது 1961-ம் ஆண்டில் 23 சதவிகிதமாக மாறிவிட்டது! எப்படி? ஏன்? முன்பு கணக்கெடுத்தபோது, இந்தி பேசுவோரில் இராஜஸ்தான், போஜ்புரி போன்ற பிற மொழிகளையும் சேர்த்துக் கணக்கிட்டார்கள்!

எங்களைப்போல் அந்த மொழிக்காரர்களும் தங்கள் குரலை எழுப்பினாலன்றி, அவர்களது மொழியும், கலாச்சாரமும், இந்தி மொழியின் அரச அணிவகுப்பின் பயங்கரக் காலடிபட்டு நசுக்கப்பட்டுவிடும் என்பதை, இப்போது அவர்களும் உணர்ந்து கொண்டார்கள்; அதனால்தான், 'இராஜஸ்தானி மொழியையும், அரசியல் சட்ட மொழிப் பகுதியில் எட்டாவது பிரிவில் சேர்க்குமாறு கோரிக்கைக் குரல் கிளம்பியிருக்கிறது!

தி. மு. கழகம் தமிழுக்காக மட்டுமல்லாமல், இந்திய மொழிகளின் உரிமைக்காகவும் கொடி உயர்த்திப் போராடத் தயாராகியிருக்கிறது!

விதிகளை மறந்தது ஏன்?

'இந்தி மொழிதான் ஆட்சி மொழி' என்று அரசியல் சட்டம் கூறுவதை வைத்துக் கொண்டு, 'இந்தியை உடனே ஆட்சிமொழியாக்கிட வேண்டும்' என்று கூறுகிறார்கள்!

"இந்தியை இந்தியாவின் கூட்டுக் கலாச்சாரத்தின் பிரதிபிம்பமாக ஆக்கும் வகையில் வளரச் செய்ய வேண்டும்"

இதுதான் அந்த விதி; அதை மறந்தது ஏன்?

'கூட்டுக் கலாச்சாரத்தின் பிரதிபிம்பம் ஆக்கவேண்டும்' என்றால், திராவிடக் கலாச்சாரத்தையும் சேர்த்திருக்க வேண்டுமே—செய்தார்களா?

இந்தி மொழியை அவ்விதம் வளர்க்க வேண்டும் என்று கூறுவதிலிருந்தே, 'அது வளராத மொழி' என்று தெரியவில்லையா?

கூட்டுக் கலாச்சாரங்களின் பிரதிபிம்பமாக அது வளராத வரையில், இந்தி ஆட்சிமொழியாவதற்குத் தார்மீக ஆதரவு நிச்சயம் கிடையாது!

அதிலென்ன சந்தேகம்... மறுபரிசீலனை அவசியமே!

1965-ம் ஆண்டில் தமிழகத்தில் மொழிக் கிளர்ச்சி நடைபெற்றபோது, தமிழகம் வந்த இந்திரா காந்தி மொழிப் பிரச்சினையில், மறுபரிசீலனை தேவை என்று கூறினார். அப்போது அவர், தமது தந்தையாரின் உறுதிமொழியை சட்டம் ஆக்குவது பற்றிக்கூடக் கூறாமல், அதற்கும் மேலே ஒரு படி சென்று, 'மறு சிந்தனை—மறுபரிசீலனை தேவை' என்றார்.

ஆம்; மறு பரிசீலனை தேவை! ஆட்சிமொழி பற்றி எல்லாப் பகுதிகளிலிருந்தும் மறு பரிசீலனை தேவை; அதற்கு அரசியல் சட்டம் எந்த வகையிலும் தடையாக இருக்க முடியாது!

[ஆட்சி மொழி பற்றி எவ்விதம் அரசியல் நிர்ணய சபையில் சட்டம் உருவாயிற்று என்பது பற்றி வரலாற்றுக் குறிப்புக்களை முரசொலி மாறன் எடுத்துரைத்தார்.]

இந்தியை ஆட்சி மொழியாக்கியது பற்றி டாக்டர் சுப்பராயன் குறிப்பிடுகையில், 'இந்திக்காரர்களின் வற்புறுத்தலுக்கும், தொந்தரவுக்கும் ஒப்புக்கொண்டோம்' என்று கூறியிருக்கிறார்!

உண்மை அதுதான்--- தயங்குவது ஏனோ?

அரசியல் சட்டத் திருத்தம் செய்வதிலுள்ள சங்கடத்தைப் பற்றி சிலர் குறிப்பிட்டார்கள்.

ஆனால் உண்மையைச் சொல்வதானால், கட்சி விட்டுக் கட்சி மாறுவதும், அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதும் இந்திய அரசியலின் தேசிய விளையாட்டுகளாகிவிட்டன!

இப்படிக் கூறுவதற்கு நான் வருத்தப்படுகிறேன்; ஆனால் உண்மை அதுதான்!

சாதாரண நிர்வாகத்தில் ஏற்படும் தடைகளுக்காக அரசியல் சட்டத்தில் மாறுதல் செய்யப் புறப்படும் நாம், 'மொழிக்கு ஆபத்து ஏற்படும்' எனும்போது, அரசியல் சட்டத்தைத் திருத்தத் தயங்கலாமா?

முதலாளி--தொழிலாளி உறவு

"நம் நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்குத் தொழிலதிபர்களுடன் தொழிலாளர்களும் சேர்ந்து பாடுபட வேண்டும்.

"தொழிலதிபர்கள் — தொழிலாளர்கள் இடையே ஏற்படும் பிணக்குகளை நல்லுறவு அடிப்படையில் தீர்த்து வைப்பதில் அரசு அதிக அக்கறை கொண்டிருக்கிறது.

"வேலை நிறுத்தம், கதவடைப்பு ஆகியவை மூலம் தொழில் முன்னேற்றம் பாதிக்கப்படுவதுதான், தொழிலாளர் வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது; எனவே, நாட்டில் தொழில் அமைதி நிலவ வேண்டும்."

--அறிஞர் அண்ணா

(பாரி நிறுவன விழாவில்)

மதுரை நகர் தி. மா. மு. க. அமைப்பு

மதுரை நகர் தி. மா. மு. க. அமைப்புக் கூட்டம் 13—12—67 அன்று திரு. மு. இராசாமணி தலைமையில் நடைபெற்றது; அனைத்துக் கல்லூரி மாணவர்களும் கலந்துகொண்டனர்; அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: கா. காளிமுத்து; துணைச் செயலாளர்கள்: அ. பொன்னம்பலம், ஆ. பிச்சை அரசு, மு. இராசாமணி; பொருளாளர்: இரா. முத்தையா.

கூட்டத்தில் சனவரி இறுதியில் மாநாடு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் பல்வேறு மூலைகளிலும் உள்ள உழவர்கள், தற்போது நவீன வேளாண்மை முறை—உரம்—வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றின் தேவையை உணர்ந்திருக்கிறார்கள்.

"இயந்திரங்களைக் குறைந்த விலையில் தயாரிக்கத் தொழிலதிபர்கள் — தொழிலாளர்கள் இடையே நட்புறவு இருக்க வேண்டும். நாட்டின் மற்றப் பகுதிகளைவிடத் தமிழ்நாட்டில் அது போதுமான அளவில் இருக்கிறது."

புயலால் பாதிக்கப்பட்ட இராமேசுவரம்

சட்டமன்ற உறுப்பினர் தங்கப்பனின் உடனடி நிவாரணப் பணி

5—12—67 முதல் 7—12—67 வரையிலும் அடித்த புயல்—மழையால், இராமேசுவரம், தங்கச்சிமடம், பாம்பன் முதலிய ஊர்களில் 2,000-க்கு மேற்பட்ட குடிசைகள், தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன.

1,000 ஆடுகள், 475 மாடுகள், 5 குதிரைகள், 17 கழுதைகள் இறந்துவிட்டன.

10,000-க்கு மேற்பட்ட மக்கள் வீடு வாசல் இழந்து, சத்திரங்களிலும் பள்ளிகளிலும் அடைக்கலம் புகுந்தனர்.

ஐந்து மீன் பிடி விசைப் படகுகள் காணவில்லை; ஆயிரக்கணக்கான மரங்கள் சாய்ந்து விட்டன.

வீதியில் நான்கு அடி உயரம் வரையில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. 12 கிராமங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

செய்தியறிந்த கழகச் சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கப்பனும், கலெக்டரும், விசைப் படகு மூலம் இராமேசுவரத்திற்கு 8—12—67-ல் வந்து சேர்ந்தனர்.

தேவைப்படும் உணவுத் தானியங்களைக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இங்குள்ள தெருக்களுக்கும், கிராமங்களுக்கும் இடுப்பளவு தண்ணீரில் இறங்கிச் சென்று திரு. தங்கப்பன் ஆவன செய்வோம் என்று மக்களுக்கு ஆறுதல் கூறினார். அவருடன் வட்டச் செயலாளர் ச. மாரிமுத்து மற்றும் கழகத் தோழர்கள் செயராமன், இராசேந்திரன், வாசு ஆகியோரும் சென்றனர்.

இங்குள்ள விவரங்களை நேரில் கண்டு தோழர் தங்கப்பன், தந்தி மூலம் அண்ணா அவர்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் செய்தி தெரிவித்தார்.

இராமேசுவரம் நகரிய அலுவலக நிர்வாக அதிகாரி கே. பி. முத்துராஜா உடனிருந்து நிவாரண வேலைகளைக் கவனித்தார்.

சேத விவரங்களைத் தயாரிப்பதில், இராமேசுவரம் நகர அமைப்பு ஆசிரியர்கள் தீவிரமாகப் பணியாற்ற முனைந்துள்ளனர்.

தஞ்சை -- முகவை மாவட்டங்களில் வெள்ளச் சேதம்

தாளடியைப் பாதித்தாலும் உற்பத்தி அளவு குறையாது

சுற்றுப்பயணம் செய்து திரும்பிய அமைச்சர் மாதவன் தகவல்

சென்னை, டிச, 15—

"இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையோரப் பகுதிச் சாலைகளும், பாசன ஏரிகளும் பெரும் சேதமடைந்துள்ளன; தஞ்சையில் ஆற்றின்கரைகள் உடைந்து, பயிர்கள், வெள்ளத்தில் மூழ்கிவிட்டன.

"தஞ்சை மாவட்டக் கடற்கரையோரப் பகுதிகளில் சாகுபடியான சுமார் 50,000 ஏக்கர் நிலம் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறது; இதனால் அப்பகுதியில் பெரும்பாலான இடங்களில், 'இரண்டாவது போகம்' என்ற தாளடிப் பயிர் பற்றி நம்பிக்கையாகச் சொல்வதற்கில்லை."

இவ்வாறு சட்ட அமைச்சர் செ. மாதவன், மூன்று நாட்களாகத் தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து விட்டுத் திரும்பியதும், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"பெய்துள்ள மழை, மாவட்டத்தின் மற்றப் பகுதியில் சம்பாப் பயிருக்கு உதவியிருப்பதால், மொத்த உணவு உற்பத்தியைப் பாதிக்காது; தாளடிப் பயிர் நட்டத்தை இது ஈடுசெய்வதுடன், அதிகமாகவும் உற்பத்தியைத் தரும்"

என்று அமைச்சர் மாதவன், நம்பிக்கை தெரிவித்தார்.

"தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிராகியிருக்கும் மொத்த நிலப் பரப்பில் வெள்ளத்தில் மூழ்கியிருப்பவை சிறிதளவே ஆகும்" என்றார்.

அதிகாரிகள் மாநாடு

"இம்மாவட்டங்களில் பாசன ஏரிகளுக்கும், ஆற்றங்கரைகளுக்கும், சாலைகளுக்கும் ஏற்பட்டுள்ள சேதத்தை மதிப்பிட்டு அவற்றை நிரந்தரமாகச் சீர்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட கலெக்டர்கள், தலைமை எஞ்சினியர்கள் மாநாட்டைத் தமிழக அரசு கூட்டியிருக்கிறது; இம்மாநாடு நாளை நடைபெறும்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நிரந்தரத் திட்டம் அவசியம்

"இம்மாவட்டங்களில் வெள்ளக் கொடுமையைத் தடுப்பதற்கு நிரந்தரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும்; இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பல கோடி ரூபாய் தேவைப்படும்; இதற்காக மத்திய அரசிடம் மாநில அரசு, நிதியுதவி கோரும்; இது சம்பந்தப்பட்ட எல்லாத் துறையினரையும் திட்ட மதிப்பீடுகளை அனுப்புமாறு கேட்டிருக்கிறோம்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா

சுற்றுப்பயணம்

★

டிச. 16 காலை 8-30 மணி: காந்தி கிராமம்; கிராம சுகாதாரம்—குடும்பக் கட்டுப்பாடு நிலையத்தின் நிர்வாகப் பகுதியைத் திறந்துவைத்தல்; 'மக்கள் தொகைப் பெருக்கம்--காரணங்களும் விளைவுகளும்' பற்றிய கருத்தரங்கினைத் தொடங்கி வைத்தல்; பிற்பகல் 2-30 மணி: சித்தையன்கோட்டை — சட்டப் பேரவை உறுப்பினர் ரெ. சொ. அ. மணி அவர்கள் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்; மாலை 4-மணி: மல்லையாபுரம்—மகப்பேறு விடுதியையும், மேல்நிலை நீர்த் தொட்டியையும் திறந்து வைத்தல்; 5-மணி: அக்காரிப்பட்டி—தெரு விளக்கினை ஏற்றி வைக்கும் விழாவினைத்தொடங்கி வைத்தல்; 6 மணி: அய்யம்பாளையம் — பொதுமக்கள் வரவேற்பு; இரவு 9 மணி: திருச்சிராப்பள்ளி—நத்தர்வாலி தர்காவில் வரவேற்பு.

கலை நிகழ்ச்சிகள்

★

புதுவை

8-வது வட்ட தி.மு.க. கிளையின் பணிமனைத் திறப்பு விழா; 17—12—67 காலை 10 மணிக்கு, மாதாகோவில் வீதி, 44-ம் எண்ணுள்ள இல்லத்தில் சு. மா. சுப்பராயன் தலைமையில் நடைபெறும்; எம். ஏ. சண்முகம் திறந்துவைப்பார்; எஸ். ஆறுமுகம் கொடி ஏற்றுவார்; ஏ. புவியரசு இனிப்பு வழங்குவார்; ஏ. முருகையன் அண்ணா படத்தைத் திறந்துவைப்பார்; ஏ. ஏ. தாஸ் குழுவினர் இன்னிசை வழங்குவர்; மாலை 6 மணிக்கு ஒதியஞ்சாலைத் திடலில் முருகுபாண்டியனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

விரவநல்லூர்

தி.மு.க., எம்.ஜி.ஆர். மன்றம் ஆகியவை சார்பில் 17—12—67 இரவு 7 மணிக்கு காந்தி சிலை முன்பு, கே. வி. தேவன் தலைமையில் விளாத்திகுளம் பி. தங்கவேலன் – மாதவன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

கழக இடைத் தேர்தல்

★

"சென்னை 74-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் செயலாளர், பொருளாளர் ஆகிய இரு பொறுப்புக்களுக்கான தேர்தல், 17-12-67 மாலை 3-மணியளவில், 74-வது வட்டக் கிளைக்கழகப் பணிமனையில் பகுதித் துணைச்செயலாளர் சி. ஆதிகேசவன் தலைமையில் நடைபெறும்; கிளைக்கழகச் செயற்குழு உறுப்பினர்கள் தவறாது வருகைதர வேண்டுகின்றேன்" என, பகுதிச் செயலாளர் மு. வரதராசன் அறிவிக்கிறார்.

பாலர் அரங்கம்

டிச. 15, 16, 17-ந் தேதிகளில்
மாலை 4 மணிக்கு

'நீரில் வாழும் மனிதன்'

(முழு நீள இரஷ்யக் கலர் படம்)

கட்டணம் வழக்கம்போல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, குரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

16--12--67

திட்டக்குடி

எம். ஜி. ஆர். மன்ற ஆண்டு விழா; மாலை 4-30 மணிக்கு; தலைவர்: அ. கிருட்டினன்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், இரா. நாராயணன்.

இராசபாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு தர்மாபுரம் காந்தி திடலில்; தலைவர்; கோ. சந்திரன்; பேசுவோர்: புலவர் அறிவுடைநம்பி, மு. க. கந்தசாமி, இரா. த. இராமச்சந்திரன், இரா. மா. பொன்னுசாமி.

காரைக்குடி

நாவலர் மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு செஞ்சைத் திடலில்; தலைவர்: பெரி. கிருட்டினன்; பேசுவோர்: சீனிவாசன் எம்.ஏ., பி.எல்.,எம்.எல்.ஏ., சிதை. சிதம்பரம், அ. சண்முகம், அ. நடராசன் பி.ஏ.,எம்.சி., மு. சொக்கநாதன்.

ஓமலூர்

நகர தி. மு. க.—எம். ஜி. ஆர். மன்றம் ஆகியவை சார்பில் மாலை 6-மணிக்கு ஈசுவரன்கோயில் திடலில்; தலைவர்: எஸ். ஆர். அர்த்தனாரி; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, செ. கந்தப்பன் எம்.ஏ., எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஆறுமுகம், கே. ஆர். கோவிந்தன், கே. செயராமன், சி. பழனி, சின்னுசாமி, மற்றும் சின்னையன்.

கா. சு. பிள்ளை நினைவுநாள் விழா

குளித்தலை கா. சுப்பிரமணிய பிள்ளை இலக்கியக் குழுவின் சார்பில் தமிழ் கா. சு. நினைவு இலக்கியப் பெருவிழா, டிச. 16, 17 ஆகிய நாட்களில் கடம்பர்கோயில் பள்ளித் திடலில் நடைபெறும்.

இரண்டு நாட்களிலும் திறனாய்வு —இலக்கிய விரிவுரை, பட்டிமன்றம், கவியரங்கம் ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

"தமிழக சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்களும், தமிழ்நாட்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்கள், கவிஞர்கள் சொற்பொழிவாளர்கள் பலரும் நிகழ்ச்சிகளில் பங்குகொள்கின்றனர்" என்று, அமைப்பாளர் திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி அறிவிக்கிறார்.

சேலம்

சிறப்புக் கூட்டத்தில் எம். ஜி. ஆர்.

17—12—67-ல் சேலம் நகர் நேரு கலையரங்கில் நடைபெறும் சங்கரி இடைத்தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டத்தில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களும் கலந்துகொள்கிறார்.

—தேர்தல் குழு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

போக்குவரத்துச் சட்டப்படி, கார் எண் தகட்டில் எண்கள் அராபிய மொழியிலும், எழுத்துக்கள் ஆங்கில மொழியிலும் மட்டுமே இருக்கவேண்டும்.

எனினும், ஆங்கில எதிர்ப்புப் போராட்டத்தினர் காட்டிவரும் வெறியுணர்ச்சிக்கு எதிராக ஏதும் நடவடிக்கை எடுக்க முடியாமல், தொடர்புள்ள அதிகாரிகள், இதுபோல் இந்தியில் எழுதப்பட்ட கார்கள்மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தனர்!

இதனையடுத்து நேற்று திரு. இரா. செழியன் அவர்கள், தமது காரில் எண்—எழுத்த இரண்டும் தமிழில் எழுதப்பட்ட பலகையைப் பொருத்தி மக்களவைக் கூட்டத்துக்கு வந்தார்! இந்தி உறுப்பினர்கள், செய்வதறியாது திகைத்திருக்கின்றனர்!

இறுதி நேரம் நெருங்குகிறது

ஒரு முறை பெங்களூரில் வாய் திறந்ததுடன், காமராசர், 'மொழிப் பிரச்சினையே முடிந்துவிட்டதாக'க் கருதி, 'அமைதி விரதம்' பூண்டுவிட்டார்!

முன்பு பதவி விலகல் நாடகமாடிய முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியமும் ஓ. வி. அழகேசனும் எங்கே இருக்கிறார்கள் எனத் தெரியவில்லை!

தமிழ்நாடு காங்கிரசு, மொத்தமாக இப்பிரச்சினையில் தலைமறைவாகியிருக்கிறது!

மக்களவையில் கடந்த சில நாட்களாக நடப்பனவற்றை இங்கே உள்ள காங்கிரசுக்காரர்கள், எங்கோ உள்ள கிரீஸ் தேசத்து மன்னன் ரோம் நாட்டுக்கு ஓடி ஒளிந்து உயிர் வாழும் செய்தியினைப்போலத் தான் எடை போடுகிறார்கள்போலிருக்கிறது!

இதற்கிடையில், தென் மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர்கள், தமிழகத்தைச் சேர்ந்த ஒருசில காங்கிரசு உறுப்பினர்களுடன் சென்று தலைமையமைச்சரைச் சந்தித்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

"நாடாளுமன்ற இடத்துக்கான வேட்பாளர்களை நூற்றுக்கு நூறு கழகம் வெற்றி பெறச் செய்தது மொழிக் கொள்கையினால்தான்; இதனை உணர்ந்தாவது, திருத்த மசோதாவில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்கள் பற்றித் திரும்பவும் யோசியுங்கள்" என அவர்கள் இந்திராவை வற்புறுத்தியிருக்கிறார்களாம்!

ஆந்திரத்து — கன்னடத்து உறுப்பினர்கள்கூடப் பலர், 'இந்தியை எதிர்ப்பதில் நாங்கள் தமிழகத்துக்குப் பின்தங்கியவர்கள் அல்லர்' என்ற உறுதியுடன் போராட முனைந்துள்ளனர் எனத் தெரிகிறது.

இந்தத் திருப்பத்துக்குப் பின்னரும், தமிழகத்துக் காங்கிரசு உறுப்பினர்களுக்குப் புத்துணர்ச்சி வந்திருப்பதாகத் தெரியவில்லை!

கழகத்தைக் காட்டி— அந்த நிழலில்தான் தலைமையமைச்சரை அணுகி— அங்கேயும் நேரிடையாக மொழி உணர்வினைக் காட்டாமல் கழகத்தின் தேர்தல் வெற்றியினைக் காட்டி — 'திரும்பவும் சிந்தியுங்கள்' எனப் பயந்து பயந்து சொல்லியிருக்கிறார்கள் போலிருக்கிறது!

சுதந்தரமாக வாக்களிப்பதற்கு அனுமதி கோரி—தங்கள் கட்சியின் இந்தி மொழி உறுப்பினர்கள் இந்திராவுக்குக் கடிதமே எழுதியிருப்பது —தமிழகத்துக் காங்கிரசு உறுப்பினர்களுக்குத் தெரியாத சேதியாக இருக்கமுடியாது!

எஸ்.எஸ்.பி., கம்யூனிஸ்டு, பி,எஸ்.பி. ஆகிய அனைத்திந்தியக் கட்சிகளின் இந்தி பேசாத உறுப்பினர்கள், மத்திய அரசின் மொழிக் கொள்கையை எதிர்த்து— கட்சி வரம்பினைப் பாராமல் —எப்படி முழங்குகிறார்கள் என்பது, தமிழகத்துக் காங்கிரசு உறுப்பினர்களின் காதுகளில் விழாமல் இருக்க நியாயமில்லை!

இந்த நிலையில், மசோதா, நாளை இறுதி வாக்கெடுப்புக்கு வருகிறது!

'மேலிடத்துக்காரர்களின் நேரிடையான கோபம் கிளம்பும்' என்றால், தமிழகத்துக் காங்கிரசுக்காரர்கள், கழகத்தை வேண்டுமானாலும் கவசமாகப் பயன்படுத்திக் கொள்ளட்டும்!

ஆனால் இந்த நேரத்திலேனும், இந்தி பேசாத மக்களின் ஆதிக்க எதிர்ப்பு அணியில் சேருவார்களா என்பதனை, கழகம் அல்ல — தமிழகம் எதிர்பார்க்கிறது!

—எஸ். ஆர்.

உள்துறை அமைச்சரின் வாதம் மீண்டும் உடைபடுகிறது!

கெஞ்சுதல் பேச்சு கேலிக்குரியதாகிறது!

இந்தி பேசாத மக்களைத் திருப்திப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, உள்துறை அமைச்சர் சவாண்,

"தென்னிந்தியர்கள் ஒருநாள் வந்து, 'இப்போது நாங்கள் இந்தி மொழியைக் கற்றுக்கொண்டுவிட்டோம்; இந்திய அரசியல்—பொருளாதார நடவடிக்கைகளில் இனி நாங்கள் பங்குகொள்ளலாமல்லவா?' எனக் கேட்கும் நாள் வரும்"

என்று, நேற்று முன்தினம் மக்களவையில் ஆற்றிய உரையின் ஒரு பகுதிக்கு, ஆந்திரத்து சுயேச்சை உறுப்பினர் தென்னேட்டி விசுவநாதன் சரியான பதில் அளித்திருக்கிறார்!

"அப்படியானால், இந்தி மொழியினைத் தெரிந்துகொள்ளும் வரையில், இந்தி பேசாதோர், இந்த நாட்டின் அரசியல் —பொருளாதார நடவடிக்கைகளில் பங்குபெறக் கூடாது – பெறமுடியாது என்ற நிலை ஏதும் இருக்கிறதோ என நான் ஆச்சரியப்படுகிறேன்"

என விசுவநாதன் குறிப்பிட்டிருக்கிறார்!

"தி. மு. கழகத்தினர் நல்ல சனநாயகவாதிகள்: இந்தியின் மாற்றத்துக்கு ஒத்துவருவார்கள்" என, கெஞ்சும் தொனியில் பேசிய சவாணுக்கு, கழக உறுப்பினர் இரா. செழியன்,

"ஆமாம்; நாங்கள் சனநாயகவாதிகள்தான்; ஆனால், மாறிவிடமாட்டோம்; மற்றவர்களையும் எங்கள் வழிக்கு மாற்றிவிடுவோம்"

எனப் பதிலளித்தது, இங்கு நினைவுகூரத்தக்கது.